BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரம் கறுப்பர் இன வரலாற்றை போற்றும் விதமாக ஒரு மாதத்தைக் கொண்டாடுகிறது

ப்ராம்ப்ட்டன் ON (ஜனவரி 28, 2022) – ப்ராம்ப்ட்டனில் வசிக்கும் கறுப்பர் இன மக்கள், இன்றைக்கு இருக்கின்ற ப்ராம்ப்ட்டன் நகரத்தை, வசிப்பதற்கேற்றதாகவும், அரவணைப்புடனும் செழிப்பாகவும் வைப்பதற்கு தங்கள் காலம் முழுவதிலுமாக ஏராளமாக பங்காற்றியுள்ளர் மற்றும் சாதித்துள்ளனர்; இதனைக் கவுரவப்படுத்தும்விதமாக, பிப்ரவரி மாதம் முழுக்கவுமாக ப்ராம்ப்ட்டன் நகரம் கறுப்பர் இன சரித்திரத்திற்கான மாதமாக கொண்டாடவிருக்கிறது. இந்த பிப்ரவரி மாதம் முழுக்கவுமே நேரில் இருந்தபடியான மற்றும் ஆன்லைன் வழி நிகழ்ச்சிகள் நிறைந்திருக்கும்.

**கறுப்பர் இன சரித்திற்கான மாதம் கொண்டாடும்விதமாக கொடியேற்றம்**
கென் வில்லியம்ஸ் சதுக்கம்
பிப்ரவரி 1, 12 நண்பகல்

இந்த மாத துவக்கத்தைக் குறிக்கும்படியாக பான் ஆஃப்ரிக்கன் கொடி ஏற்றப்பட்டு, பிப்ரவரி மாதம் முழுக்கவுமாக அது பறந்தபடி இருக்கும்.

**கறுப்பர் இன வியாபாரக் கலைஞர்கள் சந்தை – ரெவெய்ல்லெர் ஆஃப்ரிக் (Reveiller Afriq)**
ப்ரமீலி நகர் மையம்
பிப்ரவரி 8 & 9, காலை 10 மணி – இரவு 8 மணி

இந்த இரண்டு நாள் நேரடி சந்தை அனுபவத்தில் உள்ளூரில் இருக்கின்ற, கறுப்பர் இனத்தவரால் சொந்தம் கொள்ளப்பட்ட வியாபாரங்கள், தயாரிப்பாளர்கள், கலைஞர்களுக்கு ப்ரமீலி நகர் மையத்துடன் கூட்டுசேர்ந்து ஆதரவளித்தல். இரண்டாம் தளத்தில் பெஸ்ட் பை (Best Buy) நுழைவாயிலில் இந்தக் கலைஞர்கள் திடீரென முளைத்து எட்டிப்பார்ப்பதைக் கண்டுபிடித்தல்.

**வாராந்திர நிகழ்த்துகலை தொடர்கள்**
செவ்வாய்க்கிழமை இரவுகளில், மாலை 8 மணி – இரவு 10 மணி
rosetheatre.ca

மாதம் முழுக்கவுமாக அனைத்து செவ்வாய்க்கிழமைகளிலும் கறுப்பர் இன சரித்திரம் கொண்டாடப்படுவதை கேளிக்கையான, ஆன்லைன் நிகழ்த்துகலை தொடர்களாக அனுபவித்து மகிழுங்கள். இந்த நிகழ்த்துகலைகள் ரோஸ் தியேட்டர் மேடையிலிருந்துநேரலையில் ஒளிபரப்பாகும்.

- பிப்ரவரி 1: DJ க்களுக்கு இடையிலான போர் இதில் DJ ஆல்லன் (Allan) மற்றும்  and DJ வார்ஸ்நெக்ஸ்ட் (WHATSNEXT) பங்குபெறுவார்கள்
- பிப்ரவரி 8:  ஷேட் வஹீத் (Shade Waheed) உடன்  ஆஃப் தி ரெகார்ட் இனால் நடத்தப்படும் நேரலை நிகழ்ச்சி
- பிப்ரவரி 15: ACCIDA வுடன் இணைந்து  டே மெக்கன்ஸீ (Des McKenzie) யின் நிகழ்ச்சி
- பிப்ரவரி 22: ACCIDA வுடன் இணைந்து  ட்ராவிஸ் நைட்ஸ் (Travis Knights) இன் நிகழ்ச்சி

**வாராந்திர மதிய விருந்துடன் கற்றுக்கொள்ளுதல் (Lunch'n'Learns)**

ஒவ்வொரு புதன்கிழமையும், நண்பகல் 12 மணி – பிற்பகல் 1 மணி

வாராந்திர கல்வி ரீதியான ஒரு அமர்வுக்கு  மோயோ சுகாதாரம் & சமுதாய சேவைகள் (MOYO Health & Community Services) உடன் இணையவும். இதில் இருக்கும் தலைப்புக்கள்:

- பிப்ரவரி 2: ABR ஐ அறிமுகம் செய்தல், குறுக்கிடும்தன்மை, ஆற்றல் & முன்னுரிமை சலுகை
- பிப்ரவரி 9: கறுப்பின பெண்களுக்கு ஆதரவளித்தல்
- பிப்ரவரி 16: கறுப்பின 2SLGBTQ+ தனிநபர்களுக்கு ஆதரவளித்தல்
- பிப்ரவரி 23: கறுப்பர் இன பெருமையைக் கொண்டாடுதல்

**கறுப்பர் இன சரித்திரத்திற்கான மாதத்தின் அனுபவம் பற்றிய பெட்டி**

மிகவும் பிரபலமான இந்த அனுபவப் பெட்டி இந்த ஆண்டில் திரும்ப வருகிறது. குறைந்த எண்ணிக்கையிலான இந்த நிர்வகிக்கப்பட்ட பரிசு பெட்டிகளில் சிறப்பு வாய்ந்த பொருட்கள் மற்றும் சேவைகள் பொதிந்துள்ளன; இவை உள்ளூர் கறுப்பர் இனத்தினால் சொந்தம் கொள்ளப்பட்ட வணிகர்களால் வழங்கப்பட்டவையாகும். எல்லாப்பெட்டிகளிலும் இவை இருக்கும்:

- ஆக்ஸ்காட் இசைப்போட்டி அட்டை விளையாட்டு (AuxGod Music Battle Card Game)
- லாவெண்டுலா (Lavendula) மற்றும் தேயிலை மர எண்ணை பூச்சு மஞ்சி, வழங்குபவர், சுகர் ப்ளம் ஸ்க்ரப்ஸ் (Sugar Plum Scrubs)
- ஆர்ட்ஸ் வாக் ஆஃப் ஃபேம் புதுக் கலைஞர், ஐயான் வில்லியம்ஸ் (Ian Williams) வழங்கும் டிஸ்ஓரியென்ட்டேஷன்(*Disorientation*)
- இன்னும் பல!

கறுப்பர் இனத்திற்கு அதிகாரம் வழங்கும் அமைப்பாகிய [சமூகத்தில் இயல்பாக கடந்து செல்வதற்கான மீட்சி செய்தல் மற்றும் அதிகாரமளித்தல் (Restoration and Empowerment for Social Transition)] அல்லது (R.E.S.T.), எனும் அமைப்புக்கு நன்கொடையாக குறைந்தது $20 நன்கொடை அளிப்பவர்களில் முதல் 50 நபர்களுக்கு பெட்டிகள் சேர்ப்பிக்கப்படும்.

**நலமாயிருக்கும் கணங்கள்**
பொருத்தமான ஜோடி மற்றும் யோகா உள்ளிட்ட, வாராந்திர நலன் பேணல் கணங்கள் எனும் நிகழ்ச்சிக்காக ப்ராம்ப்ட்டன் நகரின் பூர்வகுடியினரும் புகழ்வாய்ந்த யோகா பயிற்றுவிப்பாளருமாகிய மேத்யூ போனஸ் (Matthew Bonas) உடன் இணையுங்கள்.

**கறுப்பர் இனக் கலைஞர்கள் இங்குதான் வாழ்கின்றனர் எனும் டிஜிட்டல் கண்காட்சி**
கார்டன் சதுக்கம்
வழங்குபவர்: [ACCIDA]

கலை, கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் தொழில்வகை வளர்ச்சி முகமை (ACCIDA) *கறுப்பின மக்கள் இங்கு வாழ்கிறார்கள்,* எனும் ஒரு பிக்ஸல் (PIXEL_ டிஜிட்டல் திரை கண்காட்சியை கார்டன் சதுக்கத்தில் வைத்து 24 அடி LED திரையில் காட்சிப்படுத்துகிறார்கள்; இதில் எட்டு (8) உள்ளூர் கலைஞர்களின் படைப்புக்கள், புதுமை படைப்புக்கள் மற்றும் சேகரித்து வைத்த பொருட்கள் ஆகியவற்றை பிப்ரவரியிலிருந்து 2022 மே மாதம் வரை காட்சிக்கு வைக்கிறார்கள்.

நிகழ்ச்சிக்கு நிதியுதவி அளிப்பவர்களாகிய அல்கோமா பல்கலைக்கழகம், ப்ராம்ப்ட்டன் நிலன்புலவகை வாரியம் மற்றும் சன் லைஃப் (Sun Life) ஆகியோருக்கு தங்களின் பெருந்தன்மையான ஆதரவுக்காக நன்றி.

கறுப்பர் சரித்திரத்திற்கான மாதம் பற்றிய மேலும் விபரங்களுக்கு வருகை தரவும்: brampton.ca/bhm2022

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டனில் உள்ள கறுப்பின சமூக உறுப்பினர்களின் முக்கியமான பணி, திறமை மற்றும் பங்களிப்புகளை அங்கீகரித்து கௌரவிக்க, கறுப்பர் இன வரலாறு பற்றிய மாதத்தைக் கொண்டாடுவதில் எங்களுடன் சேருங்கள். ப்ராம்ப்ட்டனின் கலாச்சார பன்முகத்தன்மைதான் இந்த நகரத்தை மிகவும் சிறப்பானதாக ஆக்குகிறது; மற்றும் நமது வரலாற்றையும் சமூகத்தையும் நாம் அங்கீகரிப்பது முக்கியமாகும்; அப்போதுதான் நாம் தொடர்ந்து வளர்ந்துவரும் ஒரு நகரமாக செழிக்க முடியும்.”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டனில் உள்ள கறுப்பர் இன சமூகம் நமது நகரத்தின் துடிப்பான பலகலவை மற்றும் உள்ளூர் அடையாளத்தினைக் காட்டுகின்ற முக்கிய அங்கமாகும். இந்த சிறந்த நகரத்தில் நம்முடன் வாழும் கறுப்பின சமூக கலாச்சாரத்தைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளவும், கறுப்பின வரலாற்று மாதத்தைக் கொண்டாடுவதில் எங்களுடன் சேரவும் அனைவரையும் ஊக்குவிக்கிறேன். நம்மைப் பயிற்றுவிப்பதன் மூலமும், ஒரு சமூகமாக இணைவதன் மூலமுமே எதிர்காலத்தில் இன்னும் வலுவான நகரமாக நம்மை நாம் அமைத்துக்கொள்ள முடியும்.”

- *சார்மெய்ன் வில்லியம்ஸ், நகர கவுன்சிலர், வார்டுகள் 7 & 8, ப்ராம்ப்ட்டன் நகரம்*

" கறுப்பின வரலாற்று மாதம் என்பது நமது துடிப்பான நகரம் மற்றும் பொருளாதார நில எழிலில் ப்ராம்ப்ட்டனில் வசிக்கின்ற கறுப்பின சமூகம் வகிக்கும் குறிப்பிடத்தக்க பாத்திரங்களின் வருடாந்திர நினைவூட்டலாகும். கறுப்பின சமூகத்தினர் அளித்துவரும் நீண்டகால ஆதரவை அங்கீகரிப்பதற்காக இந்த சாதனைகளை மேம்படுத்துவதில் ப்ராம்ப்ட்டன் நகரம் ஒரு அங்கமாக உள்ளது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கற்றுக்கொள்ளவும், இணையவும், கொண்டாடவும் இந்த மாதம் முழுவதும் எங்களுடன் சேருங்கள்.”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரம் உண்மையிலேயே ஒரு பலகலவை நகரம் ஆகும்; அதன் கலாசாரம், புதுமை படைப்பு, பன்முகத்தன்மை மற்றும் தனித்திறமை ஆகியவை, ஒரு சமூகத்தின் தனித்துவம் மற்றும் பங்களிப்புகளை உயர்த்தி கொண்டாடுகின்ற உலகளாவிய கிராமம் போன்ற அற்புதத்திற்கான உதாரணமாகும். பல தசாப்தங்களாக கனடாவிற்கு கறுப்பின சமூகம் வழங்கிய பல பங்களிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், அதுபற்றி இளைய தலைமுறையினருக்கு எடுத்துரைப்பதற்கும், கறுப்பர் இன வரலாறு பற்றிய மாதத்தைக் கொண்டாடுவது மிகவும் முக்கியமானது.”

- *மிஷெல் பைர்ன், மேலாளர், சம்த்துவ அலுவலகம்*

-30-

BRAMPTON

## Media Release

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். ***Twitter***, ***Facebook***, மற்றும் ***Instagram*** ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். ***www.brampton.ca*** இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்


**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சர ஊடகம்
multiculturalmedia@brampton.ca